அடுத்த வருட இறுதியில் கிழக்கில் மாகாணசபை தேர்தல்

(கொழும்பு)
அடுத்த வருடக் கடைசியில் கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை தேர்தல் நடத்த எண்ணியுள்ளதாக கூட்
(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 5 இதழ் 33
யாழ்ப்பாணம் ஞாயிறு கிழமை 20 — 12 — 1992


## ஊரெலி படகு சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
ஊரெலிப் போக்குவரத்து சேவை நேற்றுமுன் தினம் முதல் நடைபெற்றுவருகிறது.

நேற்றுமுன்தினமிரவு ஆலங்கேணியில் தரித்து நின்ற பயணிகளில் ஒருதொகுதியினர்
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்பெண்கள்மீது தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வசிக்கும் தமிழ் பெண்கள்மீது பொலிசார் தீவிர கண்காணிப்பு
(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு போரைத் தொடர்வதற்கு — யுத்ததளபாடங்களைகுவிப்பதில் அரசு தீவிரமான நடவடிக்கை

## பாதுகாப்புசெலவும்அதிகரிப்பு

(கொழும்பு)
**இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதைப் புறக்கணித்து யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு படைத்தளபாடங்களை வாங்கிக் குவிப்பதில் சிறிலங்கா அரசு மும்முரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

நாட்டின் உற்பத்தி வீழ்ச்சி யடைந்தும் பாதுகாப்பு வீடுகள் அதிகரித்தும் நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் அடுத்தாண்டுவரையும் பாதுகாப்பு வரியை அறவிடவேண்டியிருப்பதாக பிரதமரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா நாடாளுமன்றத்தில் அண்மையில்
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ தாக்கிவிட்டுத் திரும்பும் புதிய தந்திரோபாயத்தை படையினர் கடைப்பிடிப்பர்

(கொழும்பு)
குறிக்கப்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்திவிட்டு மீண்டும் முகாம்களுக்கு திரும்பி செல்வது என்ற புதிய தந்திரோபாயத்தை படையினர் கடைப்பிடிப்பார்கள் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக நேற்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் காவலரண்களை அழித்துவிட்டு முகாம்களுக்குத் திரும்புவதே தமது புதிய திட்டம் எக்கார
(4-ம் பக்கம் பார்க்க)

## தலையாட்டிகள் சகிதம் தேடுதல் தொடர்கிறது

(கொழும்பு)
கொழும்பில் தலையாட்டிகள் சகிதம் தேடுதல்வேட்டை தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய சந்திகள் சனநடமாட்டமுள்ள பகுதிகள் திடீர் திடீரென பொலிசாரால்
(4 ம்பக்கம் பார்க்க)

## தம்பிலுவில் பகுதியில் ஐவர் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)
மட்டு. தெற்கில் தம்பிலுவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஐந்து தமிழ் இளைஞர்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொலைப்பட்டதாகத் தெரி
(4-ம் பக்கம் பார்க்க)

## இரு அதிகாரிகள் உட்பட எட்டு இராணுவம் காயம்

(கொழும்பு)
தொண்டமனாறு - இடைக்காடு வீதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் இரு
4ம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்குநோக்கி இரவு நேர ஷெல்தாக்கு

(யாழ்ப்பாணம்)
பலாலி முகாம்படையினர் வலி வடக்குப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினமிரவு 9 மணி தொடக்கம் விட்டுவிட்டு ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டபடியிருந்தனர்.

படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல் குப்பிளான், ஏழாலை குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளது.

20 க்கு மேற்பட்ட ஷெல்களை படையினர் ஏவியுள்ளனர். (56)

## கொழும்பு செல்லமுடியாது பல நோயாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
கடும் நோய்க்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பல நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னர் வந்த குமணை கப்பல் நோயாளர்களை ஏற்றிச் செல்லாத நிலையில் குமணை கப்பல் கொழும்பு திரும்பிச் சென்றது. இதனால் பல நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (56

## சுப்பிரமணிய சுவாமியின் உண்ணாவிரதம் முறியடிப்பு

(சென்னை)
ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமியும் அவரது ஆதரவாளர்களும் உண்ணாவிரதமிருக்க நேற்று மேற்கொண்ட முயற்சிகளை அ. தி. மு. கவினர் குழப்பியதுடன் அவர்களை விரட்டிக் கலைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் ஓரிடத்தில்
(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சமாதானபடை மட்டு நகருக்கு விஜயம்

(மட்டுநகர்)
இலங்கையில் இனங்களுக்கிடையே சமாதான முயற்சிகளை மேற்கொண்டு 'சர்வதேச சமாதானப் படை' எனும் அமைப்பொன்று மட்டு நகருக்கு விஜயம் செய்துள்ளது.

பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இந்த சமாதானப் படையில் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் கிழக்கில் தமிழ்-முஸ்லிம்கள் வாழும் எல்லைப் புற கிராமங்களில் தங்கள் அலுவலகங்களை அமைக்கவுள்ளனராம்.

இனங்களிடையே சமாதான முயற்சிகள் ஏற்படுத்தும்நோக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களைச் சமாதானமாக்க இவர்கள் முனைகிறார்கள் எனவும் கூறப்படுகிறது. (சி

## பட்டதாரி ஆசிரியர் பயிற்சி யாழ்ப்பாணத்திலும் நடக்கும்

(யாழ்ப்பாணம்)
கொட்டக்கலையில் இம்மாதம் 23-ந் திகதி நடைபெறவுள்ள ஒருவாரப் பயிற்சியில் பங்குபற்ற முடியாத யாழ். மாவட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கு யாழ். நகரில் இப்பயிற்சியை நடாத்துவதற்கு கல்வி அமைச்சு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படிப் பயிற்சியில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து 500க்கும் மேற்பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டபோதிலும், பிரயாண வசதியீனங்களால் பெரும்
(4ம் பக்கம் பார்க்க)

## சுவிஸிலிருந்து 340 தமிழர்கள் உடன் திருப்பி அனுப்பபடுவர்

(ஜெனீவா)
சுவிஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்களில் 340 தமிழ் இளைஞர்கள் உடனடியாக திருப்பி அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோருவதற்கான தகுந்த காரணங்களை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினாலேயே இவர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸில் தஞ்சமடைந்துள்ள
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆனந்தா கலண்டர்

எல்லா விபரங்களும் அடங்கிய ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1993. மலிவு விலை ரூபா 30-00 மட்டுமே.
(எ-2696)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsuels. கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6970)

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
(சி-7070)

### 1993 பலன்

1993 புத்தாண்டு பலாபலன்கள் 06-01-93ல் ராகு - கேது மாற்றம் 12 ராசிகளுக்கும் பலாபலன்கள் ஆராய்ந்து எழுதியவர் சனி - மாஸ்ரர் விலை ரூபா 10/- விரைவில் எங்கும் கிடைக்கும்
(சி-7081)

### ஜோதிட விஞ்ஞானம்

ரேகை சாஸ்திரம், எண் ஜோதிடம், விவாகப் பொருத்தம், ஜாதகக் கணிப்புகளுக்கும் தினமும் காலை 9-00 மணிக்கு முன் சந்திக்கலாம். Prof.சத்தியதாசன், கட்டுடை
(7084)


# புதிய ஹோட்டல் கட்ட பௌத்த பிக்குகள் எதிர்ப்பு

(கொழும்பு)
பாணந்துறையில் வலன பகுதியில் புதிய உல்லாச விடுதிகட்டும் முயற்சிக்கு பௌத்த பிக்குகளும், பல அமைப்புக்களும் கடும்எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க புத்த கோயிலுக்கு பின்புறம் இந்த உல்லாசவிடுதி அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளதாம்.

இத்திட்டத்தை எரிசக்தி ராஜாங்க அமைச்சர் திரு. மேர்வின் ஜே கூரேயும், மேற்கு மாகாண முதலமைச்சரும் கடுமையாக எதிர்த்துள்ளனர். இதேவேளை திட்டத்தை செயற்படுத்த தடை ஏற்படின் நீதிமன்றம் செல்லவுள்ளதாக பாணந்துறை நகர சபை தலைவர் லெனின் பெரிணண்டோ கூறியுள்ளார்.


நாவலர் கல்வி கழகம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
SPOKEN ENGLISH
(With GRAMMAR)
BY
Mr.R. SIVALINGAM
புதிய பிரிவு
ஆரம்பம்
21-12-1992
திங்கள் 4.00 p m
(ஏ-2698)


## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழீழமீட்பு நிதி சேகரிப்பு நாளை 21-ம் திகதி காலை 8-30 மணிமுதல் பி. ப. 1.30 மணி வரை மங்கையற்கரசி ம. வியில் நடைபெறும்.


## நத்தார் இன்னிசைக் கீதங்களும் சிறுவர் நிகழ்ச்சிகளும்

சிறுவர் நிகழ்ச்சி:
21-12-92 மாலை 3-30 மணிக்கு
நத்தார் கீதங்கள்:
23-12-92 மாலை 3-30 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அசெம்பிளி ஒப் ஹோட்
(வேத சபை)
14, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(சி-7083)


## யாழ்ப்பாண மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்-1993

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தை, இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள் ஆகியவற்றை இவ்அட்டவணையில் குறிப்பிட்ட காலங்களுக்கு, 01-01-1993 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் பெறும் இறுதித் திகதி: 23-12-92 புதன்கிழமை பிற்பகல் 03-00 மணிவரையும்.

கேள்வி ஏற்கும் திகதி: 24-12-92 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும்.

கேள்விப்படிவங்களை மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரடியாக நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக சமர்ப்பித்தல்வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகர சபையின் நாணுவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 100/-

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 18-12-1992

### அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகைக் காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| ...................... | ........... | ........ | ..... ....... | ........ |
| 01. கொட்டடி சந்தை | 1 வருடம் | 500-00 | 1000-00 | — |
| 02. கொட்டடிஆட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| 1. கடை இல. 02 | 1 வருடம் | 2500-00 | 6200 00 | 112-50 |
| 2. கடை இல. 03 | 1 வருடம் | 2500-00 | 5800-00 | 112 50 |
| 3. கடை இல. 11 | 1 வருடம் | 2500 00 | 5050-00 | 112 50 |
| 03. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை கடை இல. 08 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200 00 |
| 4. கோழிக் கடை இல. 10 | 1 வருடம் | 2500-00 | 5000-00 | 200-00 |
| 5. அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 10500-00 | 135 00 |
| 06. புளியங்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 10000-00 | 200 00 |
| 07. புங்கன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500-00 | 12000 00 | 200 00 |

(எ2699)

## முஸ்லிம் எம். பி.க்கள்
# ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)
முஸ்லிம் எம் பிக்கள் குழு ஒன்று ஜனாதிபதி திரு பிரேமதாஸாவை அண்மையில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரச்னை சம்பந்தமாக இவர்கள் ஜனாதிபதியுடன் பேசியதாக தெரிகிறது. பேச்சுவார்த்தை சுமார் 45 நிமிடங்கள் வரை நீடித்தது. (இ)

## புலமைப் பரிசில் பரீட்சை:
# மன்னார் மாவட்டத்தில் 92 மாணவர் சித்தி

(கொழும்பு)
கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 92 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்

வெள்ளான்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர் பி. சயந்தன் 176 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவராகத்திகழ்கிறார். (இ)

## அகதி முகாமில்
# தொழு நோயாளி கண்டுபிடிப்பு

(புலோலி)
நாகர்கோவில் அகதி முகாமில் தொழுநோயாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்

யாழ். சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து நடத்திய ஆய்வின் போதே இந்த நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார்.

இந்த அகதி முகாமில் தொழுநோய் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது 852 அகதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (61)

# அலம்பில்பகுதியில் மக்கள் குடியேற்றம்

(முல்லைத்தீவு)
அலம்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள படையினர் அப்பகுதியைவிட்டு வெளியேறியதையடுத்து இடம் பெயர்ந்த அப்பகுதி மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களிற்கு திரும்பி விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

"ஏழுசக்திகள்' இராணுவ நடவடிக்கை மூலம் கடந்த ஜூன் மாதம் இப்பகுதிகளை ஆக்கிரமித்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த மாதம் 3-ம் திகதி அப்பகுதியை விட்டு முற்றாக வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து அலம்பில், செம்மலை, குமுழமுனை, நாயாறு, உப்புக்குளம், உப்புமாவடி வாழ் தமிழ் மக்களே மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி விவசாய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுமறது. (க)

# சத்திர சிகிச்சை கிளினிக் அதிகரிப்பு

(புலோலி)
பிரெஞ்சு வைத்தியக்குழுவினால் மந்திகைஅரசினர் ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்டுவரும் சத்திர சிகிச்சைக் கிளினிக் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் பிரதி திங்கட்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வந்த இக்கிளினிக் தற்போது பிரதி திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாட்களில் நடைபெற்று வருகின்றன.

திங்கட்கிழமை புதிய நோயாளர்களும், செவ்வாய்க்கிழமை ஏற்கனவே சிகிச்சை பெற்ற நோயாளர்களும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றனர். (61)

# பிறப்பு சான்றிதழ்கள் துரித விநியோகம்

(யாழ்ப்பாணம்)
யாழ். செயலகத்தில் அண்மைக் காலமாகப் பிறப்புச் சான்றிதழ்கள் விரைவாக வழங்கப்பட்டு வருகின்றன. உடனுக்குடன் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தேடுதல் மேற்கொள்ளப்படுவதாகவும், இரண்டு வாரத்தினுள் அவை உரியவர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

விண்ணப்பதாரிகள் அவசரத் தேவை குறித்து இதற்கான உயர் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமிடத்து, அவர்களின் பிறப்பு சான்றிதழ்கள் கூடிய விரைவில் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செயலகத்திலுள்ள இதற்கான பிரிவு மேற்கொண்டுள்ளது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைத் தேடுவதற்கான விண்ணப்பப் படிவங்களை வெளிக் கடைகளிலேயே வாங்கிக் கொள்ளவேண்டிய நிலை தொடர்ந்து இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (158)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)
வேலணை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களுக்கான ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களுக்குரிய பணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (71)

# அயோத்தி விவகாரத்தை அவதானித்தோருக்கு

# 3 மாநில அரசுகள் கலைக்கப்பட்டது வியப்பாகாது

பாரதீய ஜனதா கட்சி ஆட்சி அமைத்திருந்த ராஜஸ்தான், மத்திய பிரதேசம், இமாலயப் பிரதேச மாநிலங்களின் அரசுகள் கலைக்கப்பட்டது கடந்த சில நாட்களாகவே அரசியல் விளையாட்டை உன்னிப்பாக அவதானித்து வருவோருக்கு இப்படி நடக்கும் என்று முன் கூட்டியே எதிர்பார்த்திருந்ததால் வியப்பை அளிக்கவில்லை.

டிசம்பர் 6-ம் திகதி அயோத்தியில் நடைபெற்றது நாடகத்துக் காட்சி ஒன்றென்றால் மூன்று மாநில அரசுகள் கலைக்கப்பட்டது அந்த நாடகத்தின் உச்சக்கட்டம்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடம் இடிக்கப்பட்டதுமே உத்தரப்பிரதேச மாநில அரசு வீழ்ந்தது. உயர் நீதிமன்றத்துக்கும் மத்திய அரசுக்கும் அளித்திருந்த வாக்குறுதிகளைக் காக்கத் தவறியதால் உத்தரப்பிரதேச மாநில அரசு வீழ்ந்தது.

பாரதீய ஜனதாக்கட்சியும் அதன் தோழமைக்கட்சித் தலைவர்களின் உத்வேகமிருந்த பேச்சுகள் அயோத்தியில் லட்சக்கணக்கில் கூடியிருந்த மக்களை வெளிப்படையாகவே தூண்டின.

பாரதீய ஜனதாக்கட்சி கொடுத்திருந்த வாக்குறுதிகளைக் காப்பதற்கும், வெளிப்படையாகவே சட்டத்தை மீறுவதைப் பற்றி கவலைப்படவில்லை என்ற உண்மையையும் இந்த அயோத்தி நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எல்லா விதிமுறைகளையும் மீறி ஆட்சிப்பொறுப்பை ஏற்கத் தனக்கு தகுதி இல்லையென்று அந்தக்கட்சி நிரூபித்துவிட்டது. நீதிமன்றங்களிடம் பொய்யான வாக்குறுதிகளை அளித்த உத்தரப்பிரதேச மாநில அரசு திருத்தலங்கள், தங்கள் கையில் சட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்துவிட்டது.

பாபர் மசூதி இடிக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த நிகழ்ச்சிகள் இவ்விதம் ஒன்றன்பின் ஒன்றாக தொடர பாரதீய ஜனதாகட்சி மத்திய அரசையும் உயர்நீதிமன்றத்தையும் ஏமாற்றிவிட்டது. அதன் சொற்களை நம்பமுடியாது.

ஆகவே பாரதீய ஜனதா கட்சி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவறு எனக் கூறும் தார்மீக உரிமையை அது இழந்துவிட்டது.

அதனுடன் பாரதீய ஜனதா கட்சி ஆளும் கட்சியாக உள்ள மற்ற மாநில அரசுகளும் வஜ்ரந்தள், ஆர். எஸ். எஸ், வி. எச். பி. யையும் மீறியுள்ளதைகளை செயலாற்றுவதாகக்கூறும் வாக்குறுதிகளை நம்ப இயலாது என்று மத்திய அரசு தனது செயலுக்குக் காரணம் கற்பித்துள்ளது.

ஆகவே தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்பு கொண்ட ஆட்சிகள் கலைக்கப்பட்டுவிட்டன. அத்துடன் இந்த மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆணையின் கீழிருந்தால் மதவாத அமைப்புக்களின் மீதான தடை நடவடிக்கையை திறம்படச் செயலாற்ற முடியும். இந்த அமைப்புக்கள் தலைமறைவாக அரசியல் ஆதரவைத் திரட்டவும், வன்முறைகளைத் தூண்டி விடவும் முடியாது.

மத்திய அரசு ஆளும் கட்சியாக இருக்கையில், எதிர்க்கட்சி மாநில அரசுகள் கலைக்கப்படுவதற்கு முன் உதாரணங்கள் இல்லாமல் இல்லை.

1977ல் ஜனதாக்கட்சி ஆட்சியில், காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருந்த 8 மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. 1980ல் திருமதி இந்திரா காந்தி பிரதமரானதும், 9 காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள் தூக்கி எறியப்பட்டன. 1990ல் வி. பி. சிங் ஆட்சி அமைத்தபோது முன்னைய அரசு நியமித்திருந்த மாநில ஆளுநர்கள் நீக்கப்பட்டனர்; பல அரச அதிகாரிகள் தூக்கி எறியப்பட்டனர்.

அரசியலில் இப்படி மாநில அரசுகள் பந்தாடப்படுவது சகஜம் தான். எனவே பாரதீய ஜனதாக் கட்சி அரசு மூன்று மாநிலங்களிலும் கலைக்கப்பட்டதற்கு மற்றைய எல்லாக் கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கின்றன.

மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாஸுவும், மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைமைச் செயலர் ஹர்கிஸன்சுர்ஜீத்தும் இந்த மாநில அரசுகள் கலைக்கப்படவேண்டும் என்று பிரதமரிடம் கூறினர்.

கடந்த தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டு அமைத்திருந்த தேசிய முன்னணியும் அவ்வாறே பரிந்துரைத்தது.

பாரதீய ஜனதாக் கட்சி ஆத்ம பேதனை செய்து கொள்ளுவதற்கு இது ஏற்ற நேரம். அதன் கூட்டாளிகளான வி. எச். பி.யும், வஜ்ரந்தளும் வீழ்ச்சிக்குக் காரணம்.

இரு வேறு கட்சிகளின் பூதாகார வளர்ச்சியும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமற்போனதுமே பாரதீய ஜனதாக் கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாகின. இவ்விரு கட்சிகளும் சர்ச்சைக்குரிய பாபர் மசூதியை இடித்து, நாடு முழுவதும் கலவரங்கள் கொந்தளிக்க வழி வகுத்தன என்றால் அது மிகையாகாது. (இ)

நன்றி;
அகில இந்திய வானொலி.

## சோமாலியாவில் முறுகல்நிலை அமெரிக்கபடைகள் தாக்குதல்

(மொகடிசு)

சோமாலியாவில் தற்போது நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கும், சோமாலியாவில் உள்ள தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையில் கடும் மோதல் வெடிக்கும் அபாயம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியாவில் உள்ள பைகோவா நகருக்குக் கொண்டு சென்ற உணவுப் பொருட்களைக் கொள்ளையடித்த கோஷ்டியினர் மீது, பாதுகாப்பின் நிமித்தம் அமெரிக்கப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கப் படையின் ஜெனரல் ஜோசப் ஹோலர் கூறியுள்ளார்.

இரவு நேரங்களில் கொள்ளையர் அமெரிக்கப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருவதால், அவர்களின் ஆயுதங்களை அமெரிக்கப் படைகள் தற்போது களையவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், ஆனால் உணவு வழங்கும் பணியை இராணுவத்தினர் சிறப்பாகச் செய்து வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

## "எட்யிஸ்" நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்தொன்றை, அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

எயிட்ஸ் நோய் வைரஸில் இருந்து முக்கிய உயிர் மூலத்தை அகற்றிவிட்டு, அதனை ஆயிரம் குரங்குகளுக்குச் செலுத்தியதன் மூலம் இந்த விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர்.

எனினும் இப்பரிசோதனையை உடனடியாக மனிதர் மீது செலுத்தி வெற்றி காணமுடியாது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (வி)

## அமெரிக்கபடை சென்றும் சோமாலியாவில் மீண்டும் உணவுப்பொருள் கொள்ளை

(லண்டன்)

சோமாலியாவில் பட்டினிச் சாவில் வாடும் மக்களுக்கு அமெரிக்க இராணுவ வீரர்கள் கொண்டுசென்ற உணவுப் பொருட்களின் ஒருபகுதியை அந்த நாட்டுக் கொள்ளைக் கோஷ்டியினர் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்.

சோமாலியாவின் கிராமம் ஒன்றுக்கு பதினொட்றக் வண்டிகளில் உணவுப்பொருட்களை அமெரிக்க, பிரான்ஸ் இராணுவ வீரர்கள் பாதுகாப்புடன் எடுத்துச் சென்று விநியோகித்த சில மணித்தியாலங்களின் பின்னர் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் உணவுப்பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளையைத் தொடர்ந்து சோமாலியாவில் உணவுப் பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதில் அமெரிக்கா புதிய வழிகளைக் கையாள இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இராசி பலன்

**20-12-1992**

**(தமிழுக்கு மார்கழி 05)**

**ஞாயிற்றுக்கிழமை**

ஏகாதசி மு. ப. 8-50 வரை சுவாதி பி. ப. 2 49 வரை. சித்தயோகம் இராகு காலம் மாலை 4-54 முதல் 6-24 வரை. சுபநேரம் காலை 9-24 முதல் 10-54 வரை ஏகாதசிவிரதம்.

மேஷம்: வாழ்க்கை வசதி தொழில் மேன்மை. புதிய தொடர்பு.

இடபம்: சுபகாரியம், கௌரவம், பயண அனுகூலம்.

மிதுனம்: சகோதரர் தொல்லை, அநாவசிய கவலை, பணமுடை.

கடகம்: குடும்பத்தில் வேற்றுமை, உறவினர் பிரிவு, மன குமுறல்.

சிங்கம்: பெண் உதவி, காரியசித்தி, தொழில் சிறப்பு.

கன்னி: வீட்டில் முரண்பாடு, மனத்துன்பம், வயிற்று வலி.

துலாம்: பேச்சுவன்மை, குடும்பமகிழ்ச்சி, தெய்வதரிசனம்.

விருச்சிகம்: கடன் சுமை. மனப்போராட்டம், அலைச்சல்.

தனுசு; நினைத்ததை முடித்தல், தொழில்மேன்மை, பண வரவு.

மகரம்: பகைவர் உதவி, புதல்வர் பெருமை, சென்ற இடத்தில் சிறப்பு.

கும்பம்: குடும்பசிக்கல், தனிமைப்படல், வைத்திய செலவு.

மீனம்: வீண் வம்பு, தொழில் கஷ்டம், தான் தோன்றித்தனம்.

— ஜோஸ்யர்

## தம்பலகாமத்தில் ஆடைத் தொழிற்சாலை நிர்மாணம்

(கொழும்பு)

தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆடை தொழிற்சாலை ஒன்று துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

200 ஆடைத் தொழிற்சாலைகள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டு வருகிறது.

திருமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் மூன்றாவது தொழிற்சாலை இதுவாகும்.

முதலாவது ஆடைத் தொழிற்சாலை கந்தளாய் பகுதியில் அமைக்கப்பட்டது. இரண்டாவது தொழிற்சாலை திருகோணமலை மக்லோ பகுதியில் அமைக்கப்பட்டுவருகிறது. (இ)

## அரசியல் தீர்வுகாண்பதே அரசின் நோக்கம் - ரணில்

(கொழும்பு)

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதே அரசின் நோக்கம் என்று விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில்; இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு நாட்டில் அமைதி நிலவச்செய்யவேண்டும். இதற்காக வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள ஆயுதபாணிகளிடமிருந்து ஆயுதங்களை களையும் பொருட்டு அங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றும் தெரிவித்தார. (ரி)

## 'வாணிப தீபம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ம. வி. வாணிப மன்றத்தின் 'வாணிபதீபம்' மலரின் 12-வது இதழை பாடசாலை அதிபர் திரு. க. மயில்வாகனம் அண்மையில் வெளியிட்டு வைத்தார். மன்றத் தலைவர் செல்வி தி. சுகந்தினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'வியாபாரத்தில் சில யுத்திகளும் அணுகுமுறையும்' எனும் தலைப்பில் ஆசிரியர் சி. சதாசிவம் சிறப்புரையாற்றினார். போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. பொ. இராமநாதன் தலைமையில் நடைபெறும். (154)

0 0 0

(கொழும்புத்துறை)

அராலி தெற்கு களவத்துறை சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும். (154)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ் குருநகர் சென்றேக் கிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிக்கு சங்கமண்டபத்தில் சங்கத்தலைவர் தலைமையில் நடைபெறும். (154)

## அமெரிக்காவுக்கு இலவச தொலைபேசி அழைப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் படிக்கும் இலங்கை மாணவர்களுடன், அவர்களது பெற்றோர் இலவசமாகத் தொலைபேசியில் எதிர்வரும் 29ம் திகதி பேசலாம்.

கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் இருந்து சம்பந்தப்பட்ட பெற்றோர், இந்த இலவசத் தொலைபேசி அழைப்புக்களைப் பெறலாம். (இ)

# வீடமைப்பு நன்கொடை இன்று வழங்கப்படும்!

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ளவர்களுக்கு வீடமைப்பு நன்கொடைப்பணம் ரூபா 15,000 வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தைப் பெறுவதற்கு செயலக புனர்வாழ்வுப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களை பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரமே தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை என்பவற்றுடன் நேரில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை உடுவில், சங்கானை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மீளக் குடியமர்தலுக்கான ரூபா இரண்டாயிரமும், உற்பத்தித் திறன் முயற்சிக்கான நன்கொடைப்பணம் நாலாயிரமும் நேற்று வழங்கப்பட்டது. (71)

## 6-ம் ஆண்டு பிரவேச பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளுக்கான 6-ம் ஆண்டு பிரவேசப் பரீட்சை இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குரிய விணத்தாள்கள் 25-ம் திகதி கோட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

## திருமலையில் குமண

(நல்லூர்)

பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த குமண கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது.

குமாரி கப்பலில் இருந்து பொருட்கள் இறக்குவதில் தாமதமேற்பட்டிருப்பதனாலேயே குமண திருகோணமலையில் தரித்து நிற்பதாகவும் குமாரி பொருட்களை இறக்கிவிட்டு காங்கேசன்துறையை சென்றடைந்ததும் குமண இங்கு வந்துசேருமென தெரிவிக்கப்படுகிறது. (158)

### பட்டதாரி ஆசிரியர்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பாலாஜோர் கொட்டகலைக்கு செல்ல முடியாது இருப்பதனால் இப்பயிற்சியை யாழ். நகரில் நடத்தும்படி யாழ். கல்வித்திணைக்களம்விடுத்த வேண்டுகோளுக்கு கல்வி அமைச்சு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

### சுவிஸிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் பலர் விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் முதற்கட்டமாக இந்த இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

சுவிஸில் இதுவரையும் எழுபது தமிழருக்கு மட்டும் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு திருப்பி அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டுள்ள தமிழர்களை ஏனைய நாடுகளுக்குச் செல்லமுடியாதவாறு சுவிஸ் பொலிசார் அவர்களை தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## ஐ. தே. க. மாநாடு

(கொழும்பு)

இன்று 20-ம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறும்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வவனியா மாவட்டத்திலிருந்து 100 உறுப்பினர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

வவனியா மாவட்ட ஐ தே. க. அமைப்பாளரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான திருமதி ராஜமனோகரி தலைமையில் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.

## க. பொ. த. (உ/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாடு முழுவதிலும் நடைபெற்ற க. பொ த. உயர்தரப் பரீட்சைகளின் முடிவுகள் அடுத்தவாரம் கொழும்பில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பரீட்சையின் முடிவுகள் அடுத்தவார இறுதிப் பகுதியில் யாழ். மாவட்டத்திலும் வெளியிடப்பட்டுவிடும் என்று அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (வி)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

டிசம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலகத்திலிருந்து நேற்று முன்தினம் (18-ம் திகதி) வெள்ளிக்கிழமை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

### கிளாலி படகு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

நேற்று கிளாலி நோக்கி யாழ்ப்பாணத்திலிருந்து நூற்றுக்கணக்கான பயணிகள் புறப்பட்டுசென்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் வருவதற்காக ஆயிரக்கணக்கான பிரயாணிகள் ஆலங்கேணியில் தரித்து நிற்பதாக தெரியவருகிறது. (159, 158)

### தமிழ் பெண்கள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது

ஆயுதப்பயிற்சி பெற்ற முப்பது தமிழ்பெண்கள்கொழும்பு நகரில் ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலையடுத்தே இத்தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதேவேளை தனியார் விடுதிகள் மற்றும் வீடுகளில் பெண்களைத் தங்கவைப்பதற்குமறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

சந்தேகத்திற்குரிய பெண்கள் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# "மாவீரர் கண்ட கனவை நாம் நிறைவேற்றுவோம்"

— யோகி.

(யாழ்ப்பாணம்)

"நாங்கள் இந்தப் போராட்டத்தினின்றும் விலகிநிற்க முடியாது. இந்தப் போராட்டத்தினின்றும் ஓடமுடியாது. இந்த மாவீரர்களை நினைவுகூருகின்ற நினைவு நாட்களிலெல்லாம் நாங்கள் அவர்கள் கண்ட கனவை – இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்வோம் இந்த மண்ணிலே நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். நாளை இந்தமண்ணிலே நாங்கள் விடுதலை பெற்ற மனிதர்களாக உலகத்திற்கு வழிகாட்டுகின்ற ஒரு நாட்டை அமைக்கும் மனிதர்களாக வாழ்வோம்"

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் முதன்முதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன் நிதிதரனின் (கிறீஸ்துநாதன் சுதாகர்) 8 வது ஆண்டு நினைவாக நடாத்தப்பட்ட நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு, யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் திரு. தேவர் தலைமையில் இவ் நினைவஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது.

வீரவேங்கை அகிபோன்ஸின் தாயார் குத்துவிளக்கேற்றி இந்நிகழ்வினை ஆரம்பித்து வைக்க, லெப் கேர்ணல் விக்ரரின் தந்தையார் திரு. மருசலின், லெப்டினன் நிதியின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

### தாக்கிவிட்டு திரும்பி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம்கொண்டும் இராணுவம் முன்னேறும் இடங்களில் முகாமிடும் நோக்கம் தமக்கு கிடையாது என்றும் இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'ரணநண்ட' எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும், அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### தலையாட்டிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

கைதுசெய்யப்படுவர்கள் அந்தந்த இடங்களிலே தலையாட்டிகள் முன்னால் நிறுத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்படுகிறார்களாம்.

பொலிசாரின் இந்த நடவடிக்கையினால் கொழும்பு நகரில் நடமாடுவதற்கு தமிழ் இளைஞர்கள் யுவதிகள் அஞ்சுகின்றனர். (ரி)

### தம்பிலுவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது

மட்டக்களப்பில் அண்மையில் பெய்த பெருமழையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருட்கள் சேகரித்துக்கொண்டிருந்த தமிழ் இளைஞர்களே படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ரி)

### வடக்கு கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

பல நவீன ரக ஆயுதங்களையும், போர்த் தளபாடங்களையும் வாங்குவதற்கு தொடர்ந்து பெருந்தொகையான பணம் செலவு செய்யப்பட்டு வருகிறது.

அண்மையில் ஆர்ஜென்டீனாவிடமிருந்து 4 புக்காரா விமானங்களைக்கொள்வனவு செய்த அரசு மேலும் 4 குண்டுவீச்சு விமானங்களை வாங்கவுள்ளதாக விமானப்படைத்தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப்போர் விமானங்களின் பெறுமதி 11 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதேபோல ரஷ்யாவிடமிருந்து எம். ஐ. – 8 ரக ஹெலிகொப்டர்களையும் வாங்க அரசு தீர்மானித்துள்ளது அத்துடன் நவீனரக பீரங்கிக்கப்பல்களும் வாங்க முயற்சிகள்மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறுபோர்த்தளபாடங்களை குவித்து வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுவருகிறது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது (கி)

## மக்களின் உதவியை இனப்பிரச்னை தீர்விற்கு நாடுகிறார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்னை நீதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் பொது மக்களின் உதவியை நாடுகிறது என ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்.

சிறிகொத்தாவிலில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் கூட்டத்தில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் சிபாரிசுகள் வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றார்.

வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாண சபையாக தமிழர் பிரச்னைக்கு தீர்வாக நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்வைக்கவுள்ளதாக பங்கள முனசிங்க சபாநாயகருக்கு கடித மூலம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## வடக்கு கிழக்கு பகுதிக்கு 15கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் மீளக் குடியமர்த்தியுள்ள அகதிக் குடும்பங்களுக்கு நிவாரணமாகக் கொடுப்பதற்கு 15 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது என்று அறிவித்துள்ளது.

வீடுகள் கட்டுவதற்கும், வீட்டுத் தளபாடங்கள் வாங்குவதற்கும் வீடுகளைப் பழுது பார்ப்பதற்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

மாதந்தோறும் கொடுக்கப்படும் இந்த உதவியை மீளக் குடியமர்ந்துள்ள 29,000 குடும்பங்கள் பெறவிருப்பதாக புனர்வாழ்வு, புனருத்தாரண அமைச்சர் தயாரதன கூறியுள்ளார். (சு)

### சுப்பிரமணியசுவாமி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கூட்டம் நடத்துவதற்கு காவல்துறையினர் தமிழக அரசின் உத்தரவின் பேரில் அனுமதி வழங்காததற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்று இவ் உண்ணாவிரதம் ஆரம்பமாகவிருந்தது.

அப்போது அங்கு வந்த அ. தி. மு. கவைச் சேர்ந்த சுமார் 400 பேர் இதற்கு போட்டியாக உண்ணாவிரதமிருந்தனர். இதையடுத்து சுப்பிரமணிய சுவாமியின் ஆதரவாளர்கள்மீது கல்வீச்சும், வன்முறையும் இடம்பெற்றது. மேலும் சுப்பிரமணியசுவாமியின் ஆதரவாளர்கள் அங்கிருந்து அ. தி. மு. க. ஆதரவாளர்களால் விரட்டியடிக்கப்பட்டனராம்

இச்சம்பவத்தை பொலிசார் தடுக்க முற்படவில்லை எனவும் தங்களுக்கு தகுந்த பாதுகாப்பு தரவில்லை எனவும் இவரது நல்லாட்சி இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் குற்றம் சாட்டினர். (கி)

### இரு அதிகாரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளும், ஆறு சிப்பாய்களும் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இம்மோதலில் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பை இராணுவம் சந்திக்க வேண்டியிருந்தது என்றும் பலாலி முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் பல மணிநேர மோதலின்பின்னர் மீண்டும் முகாம் திரும்பினர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் உதவியுடன் இராணுவத்தினர் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-சு-வி)

## மதிய உணவுக்கு 150 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுக்காக அரசாங்கம் 150 கோடி ரூபா செலவழிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஆசிரியர்கள் எண்ணிக்கை 1 லட்சத்து 84 ஆயிரம் பேராக அதிகரித்துள்ளதென்றும் 6,500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பதவி கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது.

### அடுத்தவருடம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுப்படை தலைமை அதிகாரி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளதாக ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

எப்படியாவது கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்துவதற்கு அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் மேலும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து கிழக்கைப் பிரித்து தனியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என்று ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் கருத்து வெளியிட்டுள்ளார். (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8